★ பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under No QB/8945/78

மலர் 21 ஆடி 12 றம்ழான் 3 இதழ் 165

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 28-7.79

மீண்டும்
சண்டியன் சின்னத்தம்பி
சாவகச்சேரி, காரைநகர், புங்குடு தீவு ஆகிய இடங்களில் வெற்றிக் கொடி நாட்டிய
வரணியூரான் குழுவினரின்
சண்டியன் சின்னத்தம்பி
செப்டம்பர் முதல் வாரத்தில் யாழ். நகர் வருகிறார். பொதுநிதிக்காக மேடையேற்ற விரும்புவோர், விபரங்களுக்கு:-
எஸ். எஸ். கணேசபிள்ளை
மீசாலை

## மா ரூ. 1-65
## பாண் ரூ. 1-50

[கொழும்பு]

மாவின் விலை 1ரூபா 65 சதமாகவும் பாணின் விலை 1ரூபா 50 சதமாகவும் அதிகரிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்விலை அதிகரிப்பு செப்டம்பர் மாதம் முதலே அமுல் செய்யப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. [ம-இ]

RECEIVED 77-7-28 PERIODICALS DIVISION UNIV. LIBRARY CAMPUS

# யாழ்ப்பாணத்தில்எங்குமே நெருக்கடியான நிலை இல்லை!

## கொழும்பு திரும்பிய யாழ். மாவட்ட மந்திரி கூறுகிறார்

(கொழும்பு)

யாழ்ப்பாண மக்கள் மிகவும் அமைதியாக வாழ்கின்றார்கள், யாழ்ப்பாணத்தின் எந்தப் பகுதியிலும் நெருக்கடி நிலை இல்லையென்று புதிய யாழ். மாவட்ட அமைச்சர் திரு உக்கு பண்டா விஜயக்கோன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பிய அமைச்சர் அளித்த விசேட பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. விஜயக்கோன் மேலும் கூறியதாவது;

### விவசாயிகள் கடும் உழைப்பாளிகள்

யாழ்ப்பாண விவசாயிகள் கடும் உழைப்பாளிகள். அவர்களுக்கு நிலமும், நீருமே உடனடித் தேவைகளாக உள்ளன. அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உடன் நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளேன்.

யாழ். மாவட்டத்தில் கண்ணாடித் தொழிற்சாலை ஒன்று அமைப்பதற்குக் கைத்தொழில் அமைச்சருடன் பேச்சு நடத்தி, அதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளேன்.

### 2 கோடி 20 லட்சம் ஒதுக்கீடு

யாழ். மாவட்ட அபிவிருத்திக்கு பரவலாக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் 2 கோடி 20 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வடபகுதி மக்களும், தென்பகுதி மக்களும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் அவர்களிடையே நேரடித் தொடர்புகள் இன்மையே பெரும் பிரச்சினையாக உள்ளது. இந்த நிலைமையை மாற்றியமைக்க நான் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறேன். [இ]

யாழ். மாநகரசபைக்கு

## கடிதங்கள் சுற்றுநிருபங்களை தமிழில் அனுப்புக

### மேயர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை அலுவலகத்திற்கு அனுப்பும் சகல கடிதங்கள், சுற்றுநிருபங்கள் முதலியவற்றைத் தமிழிலோ அல்லது தமிழ் மொழிபெயர்ப்புடனோ அனுப்புக.

இவ்வாறு யாழ். மாநகர மேயர் திரு இ. விசுவநாதன் உள்ளூராட்சிச் சேவைப் பணிப்பாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில், இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்படும் கடிதங்கள், சுற்றுநிருபங்கள் முதலியன சிங்களத்தில் அனுப்பப்படுவதால் இவைகளின் உள்ளடக்கம் என்னவென்பது புரிந்துகொள்ள முடியாதிருக்கிறது. [illegible] நிர்வாகத்தில் [illegible] சல்கள் ஏற்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கும், உள்ளூராட்சி ஆணையாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ)

## 8 நிமிடங்களில் நடந்த யாழ். நகரசபைக் கூட்டம்

### பிரேரணைகள் எதுவும் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக் கூட்டம், நேற்று 8 நிமிடங்களில் முடிவடைந்தது.

யாழ் மாநகர முதல்வர் திரு. ஆர். விசுவநாதன் தலைமையில் சரியாகப் பிற்பகல் 3-30 மணிக்குக் கூட்டம் ஆரம்பமானது. பிரேரணைகள் எதுவும் பிரேரிக்கப்படவில்லை. கடந்த மாதக் கூட்டறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிதிக்குழுச் சிபார்சு தொடர்பாகத் திரு. தம்பு அந்தையா 3 நிமிடங்கள் பேசினர். 3-38 மணிக்குக் கூட்டம் முடிவடைந்தது.

## 'அமிர்' மீண்டும் ஜே.ஆருக்கு பதில்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம், இம்மாதம் 19ந் திகதிய ஜனாதிபதியின் கடிதத்திற்குநீண்ட பதிலொன்றை நேற்று அனுப்பியிருந்தார்.

தம் மீதும், தமிழர் விடுதலைக் கூட்டணி மீதும் ஜனாதிபதி சுமத்தியிருந்த குற்றச்சாட்டுக்கள் குறித்தும் திரு. அமிர்தலிங்கம் இம்மாதம் 11ந் திகதி கடிதம் எழுதியிருந்தார். அதற்குத் திரு. ஜெயவர்த்தன இம்மாதம் 19ம் திகதி பதில் எழுதியிருந்த இக்கடிதத்திற்கே திரு அமிர்தலிங்கம் நேற்றுப் பதில் எழுதினார். (ம-இ)

## மொரார்ஜி தேசாய் ராஜினமா! புதிய தலைவர் ஜெகஜீவன்ராம்

### அரசியலைத் துறக்கவும் விருப்பம்

புதுடில்லி, ஜூலை 27

இந்திய ஜனதாக் கட்சியின் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய், ஜனதாக் கட்சியின் பாராளுமன்றக்குழுத் தலைவர் பதவியிலிருந்து ராஜினமாச்செய்துள்ளார்.

இதையடுத்து, துணைப் பிரதமர்களில் ஒருவரான திரு. ஜெகஜீவன்ராம் ஜனதாக் கட்சியின் பாராளுமன்றத் தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

ஜனதாக்கட்சிப் பாராளுமன்றக்குழுத் தலைவர் பதவியிலிருந்து ராஜினமாச்செய்ததுடன், எம். பி. பதவியையும் ராஜினமாச்செய்துவிட்டுத் தீவிர அரசியலிலிருந்து தாம் ஒதுங்கிக்கொள்ளப் போவதாகவும் திரு தேசாய் அறிவித்துள்ளார்.

### தேசாய் மன்னிப்புக் கோரினர்

அரசு அமைக்கும் முயற்சியின்போது தமக்கு ஆதரவு அளிக்க முன்வராதவர்களின் பெயர்களும் ஏற்கனவே ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தபின் [illegible] ஆதரவாளர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தது. திரு. தேசாய் தமது ராஜினமாக் கடிதத்தில் மன்னிப்புக் கோரினர்.

தமக்குத் தெரியாமலேயே அப்பெயர்கள் சேர்க்கப்பட்டிருந்தபோதிலும் அதற்கான பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொள்வதாகவும் திரு. தேசாய் ஜனதாக்கட்சித் தலைவர் திரு. சந்திரசேகருக்கு எழுதியுள்ள ராஜினமாக் கடிதத்தில் தெரிவித்துள்ளார். (இ)

## இந்தியப் பிரதமராக இன்று சரண்சிங் பதவி ஏற்கிறார்

### ராஜ், சவான் துணைப் பிரதமர்கள்!

புதுடில்லி, ஜூலை 27

இந்தியாவின் புதிய பிரதம மந்திரியாக திரு. சரண்சிங் இன்று பிற்பகல் 1-30 மணிக்கு பதவி ஏற்பார்.

இந்திய வரலாற்றில் திரு. சரண்சிங் 2வது காங்கிரஸ் கட்சியைச் சேராத பிரதமராவார். [illegible]

இந்திய அரசியலில் கடந்த 16 நாட்களாக இருந்து வந்த நெருக்கடிக்குப் பின்னர் புதிய அரசை அமைக்குமாறு ஜனாதிபதியினால் அழைக்கப்பட்ட திரு சரண்சிங் நேற்று முழுவதும் 'ஜனதா-எஸ்' கட்சித் தலைவர்களுடனும் மற்றும் ஆதரவுக் கட்சித் தலைவர்களுடன்பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டிருந்தார்.

திரு சரண்சிங் அமைக்க இருக்கும் அரசின் மந்திரி சபையில் 'ஜனதா-எஸ்' கட்சித் தலைவர் திரு ரசஜ்நாராயன், உத்தியோக பூர்வகாங்கிரஸ் கட்சித் தலைவர் திரு வை பி சவான் ஆகியோர் துணைப்பிரதமர்களாகவும் இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த திரு ஸி சுப்பிரமணியம் அமைச்சராகவும் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. [இ]

## திருமலை நகரசபை கண்டனம்

[திருமலை]

அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை வவுனியாமாவட்டத்துடன் இணைப்பது என்ற தீர்மானத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று திருகோணமலை நகரசபை அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

திருகோணமலை நகரசபைத் தலைவர் திரு ஏ வி வெற்றிவேலு தலைமையில் கூடிய நகரசபைக்கூட்டத்திலேயே இதை

[8-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

PEUGEOT 404 வெள்ளை நிறம் 1972ம் ஆண்டு மொடல். கீழ்க்காணப்படும் விலாசத்தில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் பார்வையிடலாம், 6, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். 3142

வீடு கட்டுவோர் மற்றும் பாவனையாளர்களுக்குத் தேவையான சல்லிக்கல் வகைகளுக்கு தயவுசெய்து தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றேன். வே. திருநாவுக்கரசு, சரவணை கிழக்கு, வேலணை 3154

நல்ல நிலைமையில் உள்ள 3 ஸ்ரீ 4000 தொடர் இலக்கமுடைய 403 பேர்ஜோ கார் விற்பனைக்குண்டு. ஞாயிற்றுக்கிழமை பார்வையிடலாம் 10, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். 3161

Akai Tape Deck 4000 D S புத்தம் புதிய, பாவிக்கப்படாத அகாய் டேப் டெக். யோசப் 37/2, மார்ட்டின் ரோட், யாழ்ப்பாணம். 3131

### தேவை

நன்கு அனுபவமுள்ள ஆங்கில மருந்து விற்பனையாளர் சிங்கப்பூர் பார்மஸி லிமிட்டெட் ஸ்தாபனத்துக்குத் தேவை. உடன் விண்ணப்பிக்கவும் மூன்று மைல் சுற்றளவுக்குள் [illegible] இருப்பவர்கள் விரும்பத் 3164

கண்ணாடியில் படம் வரைவதில் அனுபவமுள்ள பெண் பெயின்ரர்கள் தேவை. விபரங்களுக்கு கடிதமூலம் தொடர்பு கொள்ளவும் கில்வர் லைன் இண்டஸ்ரீஸ், 51, ஜின்னா ரோட், யாழ்ப்பாணம். 3148

யாழ் மாநகரசபை எல்லைக்குள் கார்விடக்கூடிய சிறிய வீடு ஒன்று வாடகைக்கு உடனடியாகத் தேவை. கடிதமூலம் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 3165, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 3165

கடைச்சல் இயந்திரவேலை நன்கு தெரிந்த ஒரு நபர் உடனே தேவை அனுபவத்தையும் சம்பளத்தையும் குறித்து விண்ணப்பிக்கவும். 558, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3132

பலசரக்கு வியாபாரத்தில் அனுபவமுள்ளவரும், யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவரும், 25 வயதிற்குட்பட்ட வருமான ஆள் தேவை, உடன் தொடர்பு கொள்ளவும். றஞ்சனு ஸ்ரோர்ஸ், பாங்சால் வீதி, சின்னக்கடை, யாழ்ப்பாணம். 3158

## மருந்தாளர் சங்கக் கூட்டம்

(கொழும்பு)

அரசாங்க மருந்தாளர் சங்கத்தின் 19வது வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 29ம் திகதி இலங்கை மருத்துவக் கல்லூரியின் உடற்கூற்றியல் மண்டபத்தில், தலைவர் தஷிதா மலலசேகராவின் தலைமையில் நடைபெறும் சுகாதாரசேவை அத்தியட்சகர் டாக்டர் எச் ஏ ஜேசுதாசன் இதில் கலந்துகொண்டு உரையாற்றுவார்.

### அமெரிக்க

## காங்கிரஸ் உறுப்பினர்கள் இலங்கை விஜயம்

(கொழும்பு)

சட்டமியற்றும் அமெரிக்க காங்கிரஸ் தூதுக்குழுவொன்று ஆசியாவைச்சேர்ந்த பலநாடுகளுக்கு ஆகஸ்ட் மாதத்தில் விஜயஞ்செய்யத் திட்டமிட்டுள்ளதோடு, இலங்கைக்கும் விஜயஞ்செய்யலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கு இருக்கும் அரசாங்க அதிகாரிகள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் பரஸ்பரம்அக்கறையுள்ள சர்வதேச மற்றும் இருதரப்பு விவகாரங்கள் குறித்தும் பேசுவதற்குத் தூதுக்குழு உத்தேசித்துள்ளது இந்தப் பேச்சுக்களில் பெரும்பகுதி பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி சம்பந்தமான பிரச்னைகளை மையமாகக் கொண்டிருக்கும் ஒருநாட்டுக்கு மட்டும் உரிய திட்டவட்டமான பிரச்னைகள் குறித்து! ஆராய்வதற்காக காங்கிரஸ் தூதுக்குழுக்கள் வெளிநாடுகளுக்கு விஜயஞ் செய்வது கிடையாது.

## வி. பி. ஸாம்பியா பயணம்

(பண்டத்தரிப்பு)

செந்தமிழர் இயக்க பொதுச் செயலாளர் திரு வி. பொன்னம்பலம் ஸாம்பியா நாட்டிற்கு அண்மையில் பயணமானார்.

அங்குள்ள கல்வி நிறுவனமொன்றில் ஆசிரியராகக் கடமையாற்றவுள்ள திரு பொன்னம்பலம், 'கூட்டுறவும் கிராமஅபிவிருத்தியும்' என்ற விஷயம் பற்றி ஆராய்ச்சி செய்து கலாநிதிப் பட்டம் பெறும் முயற்சியில் ஈடுபடவுள்ளார் என்றுந்தெரியவருகிறது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல MB/188

1. தம்பு சிவசுப்பிரமணியமும் பெண்
2. தங்கரத்தினமும், உருப்பராய்.

வழக்காளி

எதிராக

செல்லையா கனகரத்தினம்,
இல. 156, கோயில் ரோட்டு, நல்லூர்.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B/188-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னும் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1979-ம் வருஷம் ஆவணி மாதம் 10-ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 4260/-ம் 14-7-76 தொடக்கம் முதல் ரூபாய் 3000/-க்கு முழுத்தொகை இறுக்கும்வரை 18 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 513/05. 15-2-78இல் வட்டிக்கணக்கால் கொடுபட்ட ரூபா 1000/- கழிக்கப்பட வேண்டும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை ''திருப்பணி நயினை வளவு'' நில. பர. 6 குளி 7 இதில் தெற்குப்புறமாக நில பர. இலா 2 குளி 7 இந்த நில. பர 2 குளி 7ம் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு நவரட்ணம் கனகேந்திரத்தினுதனம், வடக்கு முத்துக்குமாரு வைத்திலிங்கத்தின் உரிமைக்காரரினுதனம், மேற்கு ரோட், தெற்கு சி கணபதிப்பிள்ளை பெண் அரியராணியின் ஆதனம் இதடங்கலும்.

மு. நவரத்தினராசா,
விற்பனவு ஆணையாளரும் விலைமதிப்பாளரும்.

''கமலபதி'',
ஆஸ்பத்திரி வீதி,
மண்டைதீவு.

3151

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்து இந்து வேளாள உயர் படிப்பு படித்த மெல்லிய அழகான நற்குணமுள்ள மத்திய கிழக்கிற்கு போகச்சம்மதமுள்ள மணமகள் தேவை. வைத்தியத் துறையிலுள்ள பெண்களுக்குவேலைவாய்ப்பு உண்டு

மணமகன் 31 வயது உயர் படிப்புள்ள புகை, மதுப் பழக்கமற்ற மத்தியகிழக்கு வங்கி ஸ்தாபனத்தில் உயர் பதவி வகிப்பவர் மாதம் 20,000/- சம்பளத்துடன் சகல வாழ்க்கை வசதியுமுடையவர் சாதகம் குற்றமற்றது சாதகத்துடனும் முழு விபரத்துடனும் கடித மூலம் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல: 3160,

C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம்.

3160

## மரண அறிவித்தல்

### திருமதி சி. மங்கையர்க்கரசி

திருமதி மங்கையர்க்கரசி சிவசோதி காலமாகிவிட்டார். இவர் சிவசோதி (ஆசிரியர் கொக்குவில் இந்துக்கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியாவார். அன்னாரது மரணச்சடங்குகள் சனிக்கிழமை நடைபெறமாட்டாது. பின்னர் அறிவிக்கப்படும் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 3163

# சங்கச் செய்திகள்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை கல்விவட்டாரப் பாடசாலை அபிவிருத்திச் சபையின் அங்குரார்ப்பணக் கூட்டம் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் தலைமையில் யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர்: பொ சிவஞானசுந்தரம், செயலாளர் மு சிவராசா (அருணோதயாக் கல்லூரி), உபதலைவர்: பொ கனகசபாபதி (மகாஜனக் கல்லூரி) உபசெயலாளர்: வை நாகராசா (மயிலிட்டி ஞானோதய வித்தியாலயம்) பொருளாளர்: சு கனகசபை, மாவட்டப்பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்களாக திருவாளர்கள்: மு சிவராசா, சு. கனகசபை, ஏ என் வேலாயுதம், க சண்முகரத்தினம், வண பிதா ஏ ஜே இராசநாயகம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (கு)

ஃ ஃ ஃ

(புலோலி)

புலோலி ப. நோ. கூ. சங்க புலோலி தெற்கு கிளையின் கிளைக்குழு உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

திருவாளர்கள் ஆ. வேலுப்பிள்ளை, த. முத்துக்கிருஷ்ணன், வீ. கே. ஈசுரபாதம், எஸ். அரசரத்தினம், க. சந்தையா,ச. சுப்பிரமணியம், எஸ். சிவபாதம், க. விஷ்ணுகோபால் எஸ். சிவக்கொழுந்து. (கு)

ஃ ஃ ஃ

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை ப நோ கூ சங்க கொல்லங்கலட்டிக் கிளைக்கு ஏகமனதாக தெரிவான கிளைக்குழு உறுப்பினர்கள் வருமாறு:

சி. சிவமகாராசா (தலைவர்) ஆ கணேசலிங்கம் (உபதலைவர்) சி சண்முகநாதன் (செயலாளர்) மற்றும் உறுப்பினர்கள் நடராஜன், எஸ் செந்திவேல், சி கணேசலிங்கம், ந. கனகேஸ்வரன், க தியாகராசா, தங்கராசா. (கு)

ஃ ஃ ஃ

(உடுப்பிட்டி)

சட்டைவேலி- நெல்லியடிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கனுவில் கிளைக் குழுவுக்குப் பின்வருவோர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர்.

திருவாளர்கள்: எஸ். முருகேசு, கே குமாரசாமி, எம். ஜே ஏ சுரேந்திரராசன், வீ. செல்வகுலசிங்கம், க. இரத்தினசிங்கம், ஏ கனகசபை, எம். கார்த்திகேசு, ஆ நல்லதம்பி, கே கிருஷ்ணபிள்ளை (கு)

## பனம்பொருள் கைவினைபற்றி பெண்களுக்கு பயிற்சித்திட்டம்

(யாழ்ப்பாணம்)

சர்வோதய கழகங்களில் ஒன்றானதும், பிரபல்யமானதுமான ரோட்டரிக்கழகத்தின் யாழ்ப்பாணக்கிளை வருடாவருடம் தனது சமூகசேவையில் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றிவருகின்றது.

யாழ்ரோட்டரிக்கழக சமூக சேவை இயக்குநர் டாக்டர் சி. விஜயராஜா வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சென்ற ஆண்டு கழகம் ஆற்றிய சேவைகளையும், ஆற்றவுள்ளசேவைகளையும் குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: 'கிழக்கு மாகாண சூறாவளி அகதிகள் புனர்வாழ்வுக்காக, மட்டக்களப்பு ரோட்டரிக்கழகத்துக்கு 10ஆயிரம் ரூபாவையும், அம்பாறைக் கழகத்துக்கு ஆயிரம் ரூபாவையும் அன்பளிப்பாக யாழ். கழகம் வழங்கியுள்ளது. இதைவிட அகதிகள் புனர்வாழ்வுக்காக வெளிநாட்டு ரோட்டரிக்கழகங்களுடன் தொடர்பு கொண்டு பத்துலட்சத்துமூவாயிரத்து ஐந்நூற்றிஇருபத்தொன்பதுரூபா சேர்க்கப்பட்டது.

அகதிகள் புனர்வாழ்வுத்திட்டத்தின்கீழ் ஐந்து அகதிக் குடும்பங்களை கனகராயன் குளப்பகுதியில் ஐந்து ஏக்கர் காணியில் குடியமர்த்தியது, திருகோணமலைப் பகுதியைச் சேர்ந்த நெடுங்கேணி என்னுமிடத்திற்கு குடிநீர்ப் பிரச்னையை நிவர்த்திசெய்ய 5ஆயிரம் ரூபா அனுப்பிவைக்கப்பட்டது.

யாழ். ரோட்டரிக் கழகம் யாழ்ப்பாண இருதயநோயாளர் சிகிச்சைப்பிரிவுக்கு மின் இயக்க 'லிப்ட்' ஒன்றினை யாழ் அரசாங்க அதிபரது உதவியுடன் நிறுவத் தீர்மானித்துள்ளது இதற்கென கழகத்தின் வரவு-செலவுத் திட்டத்திலிருந்து ஒருலட்சத்து அறுபதினாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது மேலும் யாழ் பெரியாஸ்பத்திரியின் குழந்தைகள்பிரிவுக்கான உள் அலங்காரவேலைகளையும் கழகம் பொறுப்பேற்றுள்ளது.

இருபெண்களை தமிழ்நாடு தூத்துக்குடி ரோட்டரிக்கழகத்தின் ஆதரவுடன் பனம்பொருள் குடிசைக்கைத்தொழில் சம்பந்தமான பயிற்சியைப்பெற பனபாட், திருநெல்வேலி ஆகிய இடங்களுக்கு அனுப்ப உத்தரவாதமளித்துள்ளது இதைவிட தமிழ்நாட்டிலிருந்து பனம்பொருள் கைவினைப்பொருள் சம்பந்தமாக, இருவிரிவுரையாளர்களை வரவழைத்து அவர்கள் மூலமாக முப்பது பெண்களுக்கு இத்துறையில் பயிற்சியளிக்கத் தீர்மானித்துள்ளது. இப்பயிற்சி வகுப்புக்கள் பெரும்பாலும் இவ்வருடம் செப்டம்பர் மாதமளவில் ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

ஷாங்காயில்

## ஆசிய மாணவர்கள் தாக்கப்பட்டனர்

பாரிஸ், ஜூலை 27

ஷாங்காய்நகரிலுள்ள உயர் கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளைச் சார்ந்த பல மாணவர்கள் சீனர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலின் விளைவாக 18 மாணவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும், இவர்களில் 12 பேரின் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இச் சம்பவம் குறித்து ஷாங்காய் நகரில் உள்ள பல நாடுகளின் ராஜதந்திரிகள் நகரநிர்வாகத்திடம் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

மாணவர்களைத் தாக்கிய கலகக்காரர் கோஷ்டியில் ஏறத்தாழ 3,000 சீனர்கள் இருந்தனர் என்று கொங்கோ மாணவர் ஒருவர் 'பிரான்ஸே பிறெஸ்' நிருபரிடம் கூறியுள்ளார்,

இன்றைய சீன ஆட்சியாளரின் போக்கினை விமர்சிக்கும் சுவரொட்டிகளை மாணவர்கள் ஒட்டியதைத் தொடர்ந்தே இத் தாக்குதல் சம்பவம் நடந்ததாகத் தெரிகிறது

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# நாவலர் நினைவு நூற்றாண்டு: இன்று தொடக்க விழா

(யாழ்ப்பாணம்)

நாவலர் பெருமானின் நூறாவது குருபூசையை முன்னிட்டு இம்மாதம் முதல் டிசம்பர் மாதம்வரை நாவலர் நூற்றாண்டைக் கொண்டாடுவதென்னும் நாவலர் சபையின் திட்டப்படி, நாவலர் நினைவு நூற்றாண்டு ஆங்குரார்ப்பண விழா இன்று மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாவலர் சபையின் தலைவரும் முன்னைநாள் நீதியரசருமான திரு வீ சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், ஏழாலையூர் புலவர் மு. கந்தையா இயற்றிய 'நாவலர் பிள்ளைத்தமிழ்' என்னும் நூல் வெளியிடப்படும். சபையின் சிரேஷ்ட உபதலைவரும் முன்னைநாள் நீதியரசருமான கலாநிதி எச். டபிள்யு. தம்பையா கியு சீ., நூலாசிரியருக்குப் பொன்னாடைபோர்த்திப் பாராட்டுரை வழங்குவார். தொழிலதிபர் திரு. சி. சின்னத்துரை முதற்பிரதியை வாங்குவார்.

திரு. மு சிவசிதம்பரம் எம். பி., பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, கலாநிதி பொ. பூலோகசிங்கம் ஆகியோர் சிறப்புரை ஆற்றுவார் இவ்விழாவில் திரு. கௌரீஸ்வரி ராஜப்பன் திருமதி பத்மினி சிவராசா ஆகியோரின் இன்னிசை விருந்தும், மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## ஓவியர் 'பென்' யாழ். திரும்பினார்

(யாழ்ப்பாணம்)

சென்னை அடையாறு முத்தையாசெட்டியார் உயர்நிலைப் பள்ளியில் ஓவியம்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக அழைப்பையேற்று அங்கு சென்றிருந்த இலங்கை கல்வி கலை பண்பாட்டுக் காப்புக் கழகப் பொதுச் செயலாளர் ஓவியர் ச. பெனடிக்ற் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளார்.

கடந்த ஆண்டு முற்பகுதியில் சென்னை சென்ற ஓவியர் சுகவீனம் காரணமாக அங்கு தங்கி சிகிச்சை பெற்று உடல் நலத்துடன் திரும்பியுள்ளார்.

சென்னையில் தங்கியிருந்த காலத்தில் ஓவியர் பெனடிக்ற் கழக வளர்ச்சிக்கான பணிகளிலும் ஈடுபட்டிருந்ததுடன் ஆங்காங்கு கலைச் சொற்பொழிவுகளையும் நிகழ்த்தினார்.

'காவல் ஒரு கலை' என்ற தலைப்பில் தமிழ்நாடு பொலிஸ் கமிஷனில் அப்போதைய பொலிஸ் கமிஷனரும் தற்போது இன்ஸ்பெக்டர் ஜெனரலாயுள்ளவருமான திரு பொன் பரமகுரு தலைமையில் சொற்பொழிவு ஆற்றினார். இதில் பல உயர் அதிகாரிகளும் இரகசியப் பொலிஸ் அதிகாரிகளும் பங்குபற்றினர்.

இங்கு கழகச் செயலகக் கட்டடத்திற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் ஓவியர், கட்டடக்கால் கோள்விழாவினையடுத்து கழகச் சார்பாக உலகத்தமிழ்க்கலைத்தூதினை மேற்கொள்ளவிருக்கிறார். (அ)

# சைக்கிள்சவாரிக்கு புதியபாதைகள்

(கொழும்பு)

பெரிய வீதிகளில் சைக்கிள் பிரயாணிகளுக்கென புறம்பான பாதைகளை அமைக்க அரசு ஆலோசித்து வருகிறது.

புதிதாக அமைக்க இருக்கும் நகர வீதிகளில் சைக்கிளில் செல்பவர்களுக்கென புறம்பான பாதையை அமைக்குமாறு மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இப்போதுள்ள பெருந்தெருக்களில் சைக்கிள் பிரயாணிகள் செல்வதற்கென புறம்பான பாதையை அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள்பற்றி ஆராயுமாறும் அமைச்சு உத்தரவிட்டுள்ளது. (இ)

## பிரிட்டனின் உதவியுடன் ஆசிரியர்களுக்கு ஆங்கிலப்பயிற்சி

(கொழும்பு)

கல்வி அமைச்சு பிரிட்டனின் உதவியுடன் உள்ளூரில் ஆங்கில ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்புக்களை நடத்தவுள்ளது.

இப்பயிற்சி வகுப்புக்கள் நீர்கொழும்பு பொலவன ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்வி அதிபர் திரு. கே. எஸ். பலிஹக்கர இதுபற்றித் தெரிவிக்கையில் இப் பயிற்சி நெறியின் ஆரம்பவகுப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட அறுபது ஆசிரியர்கள் பயிற்சிபெறுவார்களென்றும், சிறந்த அனுபவம் வாய்ந்த ஆறு உள்நாட்டு விரிவுரையாளர்களும் விரிவுரைகளை வழங்குவார்களென்றும் தெரிவித்தார். (ஐ)

## மல்லாகம் பழம்பிள்ளையார் சங்காபிஷேகம்

(மல்லாகம்)

மல்லாகம், பழம்பிள்ளையார் கோவில் நவோத்தர சதசகஸ்ர மகா சங்காபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் நடைபெறவுள்ளது

"மூலாதார மூர்த்தி" என்னும் பொருள்பற்றி அருட்கவி சி. விநாசித்தம்பி அன்றிரவு சொற்பொழிவாற்றுவார்.

சுழிபுரத்தில்

## சைவப்பெரியார் குருபூசை

(யாழ்ப்பாணம்)

சைவப்பெரியார் சிவபாத சுந்தரனார் நூற்றாண்டு சபையினரின் ஆதரவுடன் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி இந்து மாணவர் எடுக்கும் குருபூசை விழா கல்லூரி பிரதான மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் அதிபர் திரு. க. அருணாசலம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

'சைவ வரலாற்றில் சைவப் பெரியார் வகிக்கும் பாத்திரம்' என்னும் பொருள்பற்றி யாழ் பல்கலைக்கழகத் தமிழ்விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணியம் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். நூற்றாண்டு விழாச்சபைத் தலைவர் திரு. ந. சபாரத்தினம், பொதுச் செயலாளர் திரு க கிருஷ்ணபிள்ளை ஆகியோர் உரையாற்றுவர், மற்றும் புராணபடனம், செல்வன் சு சுரேஷ் குமாரின் உரைநிகழ்ச்சி முதலியனவும் இடம்பெறும். (அ)

இரவு 8 மணிக்கு சுவாமி பூந்தண்டிகையில் வீதிவலம் வருவார். (கு)

## பணியாளர் பிரதிநிதியாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க நெறியாளர் குழுவுக்கு, பணியாளர் பிரதிநிதியாக திரு. த. பொன்னம்பலம் பலத்த போட்டியின் மத்தியில் 23 மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

இவர், 1978ம் ஆண்டு நடைபெற்ற கூட்டுறவு பணியாளர் உயர்பிரிவு பரீட்சையில் கணக்கியலில் திறமைச் சித்தியுடன் சித்தியடைந்துள்ளார். 1974-75ம் ஆண்டுகளில் ஸ்ரீலங்கா-மேற்கு ஜெர்மன் விவசாய யந்திரவியல் பயிற்சிநிலையத்தில் நீர் இறைக்கும் யந்திரம், நாலு சில்லு உழவு யந்திரம் ஆகிய பயிற்சிகளில் கலந்து ... யடைந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மானிப்பாய்

## புனித அன்னம்மாள் திருவிழா



(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலய ஆண்டுத் திருவிழா இம்மாதம் 20ம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, விழாவுக்கு ஆயத்த நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 6 மணிக்கு நடைபெற்றுவருகின்றன. இன்று மாலை கூழாவடியில் நற்கருணை ஆராதனையும், அங்கிருந்து நற்கருணை நாதரின் சிறப்புப் பவனியும் இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 5-30 மணிக்கும், 6 30 மணிக்கும் திருநாள் பாடற்பலியும் தொடர்ந்து புனித அன்னம்மாளின் திருச்சுரூப பவனியும் இடம்பெறும்.

மாலை சிறுவர் ஆண்டைச் சிறப்பிக்குமுகமாக சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டி, பேச்சுப்போட்டியும் சரபந்தாட்டம், மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், இல்லங்களுக்கான மெய்வல்லுனர் போட்டிகளும் நடைபெறும், தொடர்ந்து நடைபெறும் பரிசளிப்பு வைபவத்தில் சிறப்புமலர் வெளியீடும், மானிப்பாய் அருணோதய மன்றத்தாரின் 'ஏன் பிறந்தாய் மகளே' எனும் சமூக நாடகமும் இடம்பெறும்.

பங்குத்தந்தை அருட்திரு மேரி பஸ்ரியன் அடிகளார் தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. (அ)

## மக்கள் கருத்து

### பக்திப்படங்கள் மீண்டும் திரைக்கு வருமா?

பல வருடங்களுக்கு முன்பு ஓடிய ஔவையார் படம் மீண்டும் யாழ் நகரில் தற்போது திரையிடப்படும்போது முன்பு பார்க்காதவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததுடன் தமிழ் மக்களின் ஆதிகால பண்பாடு, தெய்வபக்தி, தமிழ்மொழியின் சிறப்பு, ஔவையாரின் பாடல்கள் போன்றவற்றை மாணவர் சமுதாயமும் ஏனையவரும் அறிந்துகொள்ளக்கூடியதாயுள்ளது.

இதேபோன்று முன்பு ஓடிய திருவிளையாடல், கந்தன் கருணை, திருமால் பெருமை, பட்டினத்தார், 'திருவருட் செல்வர், சரஸ்வதி சபதம், ஹரிச்சந்திரா போன்ற படங்களும் மீண்டும் யாழ்நகர்த்தியேட்டர்களில் திரையிடப்படுமாயின் அவற்றை முன்னர் பார்க்காதவர்களுக்கு வாய்ப்பளிப்பதாயிருக்கும் மாணவர் சமுதாயம் கடவுள் பக்தியும் புராண அறிவும் நல்லொழுக்கமும் பெற்றுத்திகழ்வதற்கு மேற்குறிப்பிட்ட படங்கள்போன்றவற்றை மீண்டும் யாழ்நகரில் திரையிடுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் முன்வருவார்களா?

ஐ. இராசரத்தினம்
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.


## நல்லூரில் முருகனடி போற்றிசைத்துச் சேவிப்போமே

தீவினை செய்திடினும் நல்லூரில் முருகேசன் திருமுன்னுற்றால்
தூயவர்க ளாமியே தொண்டராய்த் திகழ்ந்திடுவர் தொல்லுலகில்
ஆயதனை ஆராய வேண்டுவது தேவையில்லை அடுஞ்சமர் செய்
மாயையின் மகன்சூரன் சேவலாய் மயிலாகி மகிழ்ந்தானன்றே.

தந்தைக்கு முன்னரே தனிப்பிரண வப்பொருளைத் தானேசொன்ன
கந்தவேட் பெருமானைக் கனவிலும் நினைவிலும் கருதிநின்று
வந்தனைகள் செய்வோர்க்கு மருவிவரு தீவினைகள் வந்துசேரா
சிந்தித்து நல்லூரில் முருகனடி போற்றிசைத்துச் சேவிப்போமே.

– நீர்வை பண்டிதர் நீ.சி. முருகேசு


ஆரம்ப வெளிறல் நோய்-
வளர்ந்த பின் வெளிறல் நோய்



உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம்,
கோவாமலர், தக்காளி ஆகியவற்றைப்
பாதிக்கும் ஆரம்ப வெளிறல்,
வளர்ந்த பின் வெளிறல்
நோய்களையும் மற்றும் சகல நோய்த்
தொல்லைகளையும் கட்டுப்படுத்த

பாவியுங்கள் டைதேன் எம்-45
அற்புதமான ரசாயன மருந்து

வழங்குவோர்:
ஏ. பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
62 ஜெத்தவன வீதி,
கிராண்ட்பாஸ், கொழும்பு 14

# "இணைப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டாம்!"

## ஜனாதிபதிக்கு தமிழ்க்காங்கிரஸ் மகஜர்

[கொழும்பு]

அனுராதபுர மாவட்டத்தின் மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை வவனியா மாவட்டத்துடன் இணைத்தது சம்பந்தமாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வன்மையாக கண்டனம் தெரிவித்துள்ளது

இது சம்பந்தமாக அ. இ. த காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம், ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜயவர்த்தனவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது!

"அனுராதபுர மாவட்டத்தின் மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளான கடவத்தக்கோறளை, கஞ்சிட்டிக்கோறளை, பதவியா ஆகிய பகுதிகளை, வவனியா மாவட்டத்துடன் முன்பு இணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபொழுது, எங்கள் கட்சி 21-3-79-ல் கூடிய அதன் செயற்குழுக் கூட்டத்தில் அத்தகைய நடவடிக்கைகளைக் கண்டித்தும் அதனைக் கைவிடும்படி அரசாங்கத்தைக் கோரியும் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. அத்தீர்மானத்தின் ஒரு பிரதி தங்களின் மேன்மை மிகு சமூகத்திற்கும் அனுப்பப்பட்டிருந்தது

"எங்கள் கட்சி மட்டுமல்ல பாராளுமன்றத்தில் த. ஐ. வி. கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஏனைய சமூக நல ஸ்தாபனங்களும் அத்தகைய நடவடிக்கைகளைக் கைவிடும்படி கோரியிருந்தன ஆனால் அரசாங்கம் அத்தகைய கோரிக்கைகள் யாவற்றையும் புறக்கணித்து அப்பகுதிவாழ் பெரும்பாலான மக்களின் எதிர்ப்பின் மத்தியில், இணைப்புத் தீர்மானத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளமையால், எங்கள் கட்சியின் பலமான எதிர்ப்பையும், கண்டனத்தையும் இக்கடிதத்தின் மூலம் தெரியப்படுத்த விரும்புகின்றேன்

"இத்தீர்மானம் நிறைவேற்றப்படுமுன் வவனியா மாவட்டம் மூன்று தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் ஒரு சிங்கள உதவி அரசாங்க பிரிவையும் கொண்டிருந்தது. இம்மாவட்டம் பண்டைக் காலம் தொட்டு தமிழ்ப்பகுதியாக இருந்து வந்ததற்குச் சரித்திரச் சான்றுகள் மிகத் தெளிவாகவுள்ளன. இந்த ஓர் உதவிச் சிங்கள அரசாங்க அதிபர் பிரிவுகூட அண்மைக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட திட்டமிட்ட அரசாங்க குடியேற்றத்தின் விளைவேயாகும். இத்தகைய குடியேற்றங்களுக்கு வவனியா மக்களும், தமிழ்க் கட்சிகளும் தொடர்ச்சியாகத் தங்கள் எதிர்ப்புக்களைத் தெரிவித்து வந்துள்ள போதும், அரசாங்கங்கள் அப்பகுதியைச் சிங்களப்பகுதியாக மாற்றும் நோக்குடன், குடியேற்ற விதிகளையும் புறக்கணித்து படிப்படியாக அப்பகுதிகளில் சிங்கள மக்களையும், குடியேற்றி வந்தன. குடியேற்றத் திட்டங்கள் நாட்டின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட வேண்டுமேயன்றி வகுப்புக் கலவரங்களை உருவாக்குவதற்கு உதவக் கூடாது. ஆனால் தற்போதைய அரசாங்கமோ முந்தைய அரசாங்க நடவடிக்கைகளிலும் ஒருபடி மேலே சென்று திட்டமிட்டு இவ்விணைப்புச் சட்டத்தை உருவாக்கி, ஏனைய அரசாங்கங்கள் பல ஆண்டுகளாக அடைய முயற்சித்த செயலை ஒரே நாளில், நான்கு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் மூன்று தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் கொண்ட ஒரு சிங்களப் பகுதியாக வவனியாவை மாற்றி விட்டது. இது ஓர் தார்மீக நடவடிக்கை அல்ல என்பதும் மட்டுமல்ல சிறுபான்மையோரை அவர்கள் பெரும்பான்மையாக வாழும் அவர்களது சொந்தத் தாயகத்திலேயே சிறுபான்மையினராக்கும் நடவடிக்கை என்பதனை நியாயத்துடன் நோக்கும் எவரும் ஏற்றுக் கொள்ளத் தவற மாட்டார்.

1978-ம் ஆண்டு அரசமைப்பு, வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழை நிர்வாக மொழியாக்குவதற்கு அங்கீகாரம் வழங்கியிருக்கின்றது! புதிய வவனியா மாவட்டம் வடமத்திய மாகாணத்தின் சிலபகுதிகளைக் கொண்டிருப்பதும், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களில் சிலர் புதிய மாவட்டத்தின் நிர்வாக மொழி சிங்களமே என்று நாடாளுமன்றத்தில் கூறியிருப்பதும், இது வரை வவனியா மக்களுக்கு அரசமைப்பால் வழங்கிய உரிமைகளை மீறுவது மட்டுமல்ல, இவ்வரசாங்கம் தமிழ் பேசும் மக்களை நசுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரசு என்பதனையும் ஊர்ஜிதப்படுத்தும் என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

"இன்று வேறெந்த மாவட்டத்தின் எல்லையும் மாற்றப்படாத நிலையில் அவசரஅவசரமாக வவனியா மாவட்டத்தின் எல்லையை விஸ்தரித்து அங்கு சிங்களப் பகுதிகளைச் சேர்த்து அதனை ஒரு சிங்கள மாவட்டமாக மாற்றுவது திட்டமிட்டு வேண்டுமென்றே தமிழ் பேசும் மக்களை நசுக்கி ஒடுக்கும் ஒரு நடவடிக்கையென்றே எமது கட்சி கருதுகின்றது. இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டுவிட்டு 'தமிழ்ப்பேசும் மக்களின் பிரச்னைகளை ஒரு மாதத்துள் தீர்த்து விடுவேன்' என்று கூறுவது சாத்தியமற்றது. இத்தகைய நடவடிக்கைகள் தாங்கள் விரும்பும் இன ஐக்கியத்தை உருவாக்க ஒருபோதும் உதவாததுடன், வேற்றுமைகளையும் வேறுபாடுகளையும் வளர்க்கும். எனவே தாங்களே இந்நாட்டின் அதி உயர் நிர்வாகபீடமாகவிருப்பதால் இக்கடைசி நேரத்திலாவது இழைக்கப்பட்ட தவறைத் திருத்துவதற்காக அத்தகைய இணைப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதனை தங்கள் மேலான அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுத்து நிறுத்தும்படி ஒற்றுமையினதும் இன ஐக்கியத்தினதும் பேரால் வேண்டுகிறேன்" என்று ஜனாதிபதியை அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி சார்பில் அதன் பொதுச் செயலாளர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கேட்டுள்ளார்.





கிளிநொச்சி

### சென்திரேசா சிறுவர்கள் சுற்றுலா

[பரந்தன்]

கிளிநொச்சி சென்திரேசா மகளிர் கல்லூரி பாலர்வகுப்பு ஆசிரியர்களும் 130 மாணவர்களும் பரந்தன் நவஜீவனம் விவசாயப்பண்ணையைத் தமது சுற்றுலாவின்போது பார்வையிட்டனர். இவற்றிற்குப் பொறுப்பாயிருந்த அதிபர் செல்வி ஆர் சோமசுந்தரத்தை நிர்வாகிகள் செல்வி பேக்கரும் வண ஏ சி தம்பிராசாவும் வரவேற்றுப் புதியமுறையில் விவசாயப் பண்ணை நடப்பதைக் காண்பித்தனர். தமது சுற்றுலாவில் பரந்தன் கைவை எம் வி ஏ யையும் இவர்கள் பார்வையிட்டனர்! (அ)



இலங்கைக் கல்வி, கலை, பண்பாட்டுக்காப்புகழகச்செயலகக்கட்டிட மாதிரி அமைப்பை இங்கு காண்கிறீர்கள். அடுத்த மாதம் நடைபெற விருக்கும் இக்கட்டிடத்திற்கான கால்கோள் விழாவையொட்டிவெளியிடப்படவிருக்கும் சிறப்புமலரின் முகப்பினை அலங்கரிக்கும் இம்மாதிரி அமைப்பையும் மாதிரி உருவடிவத்தையும் தென்னிந்திய பிரபல திராவிடக்கலைச் சிற்ப ஸ்தபதி எஸ். ஆச்சாரி வரைந்தும் உருவாக்கியும் அளித்துள்ளார். இந்த ஸ்தபதியே கன்யாகுமரி சுவாமி விவேகானந்தர் நினைவுமண்டபத்தை நிறுவியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### விக்டர் தென்னக்கோன் தலைமையில்

# ஜனாதிபதி ஆணைக்குழு

(கொழும்பு)

அரசின் நிர்வாகத்தைப் பன்முகப்படுத்துவது தொடர்பாகவும், சகல சமூகத்தவர்களினதும் அரசியல், பொருளாதாரப் பிரச்னைகளைக் கண்டறிந்து அவற்றை நீதியான முறையில் தீர்த்து வைக்கும் முகமாகவும் நியமிக்கப்படவிருக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவராக முன்னாள் பிரதம நீதியரசர் திரு. விக்டர் தென்னக்கோன் கியூ. ஸி. நியமிக்கப்படலாமென்றும், மற்றைய இரண்டு உறுப்பினர்களாக டாக்டர் ஏ. ஜே. வில்ஸன், திரு. ஏ. ஸி. எம். அமீர் கியூ. ஸி. ஆகியோர் நியமிக்கப்படலாமெனவும் நம்பிகமாகத் தெரியவருகிறது.

இந்த ஆணைக்குழுவுக்கு தமிழர் விடுதலை கூட்டணி ஒத்துழைப்புக் கொடுப்பதுடன், கூட்டணியின் பிரதிநிதியாக டாக்டர் நீலன் திருச்செல்வம் நியமிக்கப்படலாமெனத் தெரியவருகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதியாக முன்னாள் சபாநாயகர் திரு. ஸ்டான்லி திலகரத்ன நியமிக்கப்படலாமெனத் தெரியவருகிறது ஐக்கிய இடதுசாரி முன்னணி இது சம்பந்தமாக இன்னும் தீர்க்கமான முடிவெதுவும் எடுக்கவில்லை.

ஜனாதிபதி கமிஷன் நியமனம் சம்பந்தமான உத்தியோக பூர்வமான அறிவிப்பு இன்று அல்லது நாளை வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

#### தென்னக்கோன்

திரு. விக்டர் தென்னக்கோன் கியூ. ஸி முன்னாள் பிரதம நீதியரசராவார்.

கண்டி, செண். அந்தனீஸ் கல்லூரியில் கல்விபயின்ற இவர், இலங்கைப் பல்கலைக் கழக பட்டதாரியாகும். 1943ல் சட்டத்துறையில் ஈடுபட்டு 1946-ல் அட்டோர்னி ஜெனரல் இலாகாவில் கடமையாற்றத் தொடங்கிய இவர் 1970-ல் அட்டோர்னி ஜெனரலாக பதவி உயர்வு பெற்றார்.

#### அமீர்

கொழும்பு ஸஹிரா கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைப் பயின்ற திரு ஏ ஸி எம் அமீர், பின்னர் கேம்பிறிஜ் குயீன்ஸ் கல்லூரியில் சேர்ந்து சட்டத்திலும், சரித்திரத் துறையிலும் பட்டம் பெற்று, 1940 ஆகஸ்டில் இலங்கை வழக்கறிஞரானார்.

அரசுதரப்பு சிரேஷ்ட வழக்கறிஞராகப் பணியாற்றிய திரு அமீர், 1966-ல் சொலிஸிட்டர் ஜெனரலாகப் பதவி உயர்வு பெற்றார். இதன் பின்னர் அட்டோர்னி ஜெனராலாக கடமையாற்றி வழக்கறிஞராகப் பணியாற்றும் பொருட்டு 1969-ல் ஓய்வு பெற்றார்.

#### வில்ஸன்

அரசியல் விஞ்ஞானத்தில் கலாநிதிப்பட்டம் பெற்ற [illegible] டர் ஏ ஜே வில்ஸன், பத்திரிகையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

அமரர் திரு எஸ் ஜே வி செல்வநாயகத்தின் மருமகனான டாக்டர் வில்ஸன், இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பொருளாதார, அரசியல் விஞ்ஞானத் துறையின் உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றுவதற்கு முன்னர் 'டெயிலி நியூஸ்' ஆங்கிலத் தினசரியின் துணை ஆசிரியராகப் பணியாற்றினார், லண்டனில் 'பி எச் டி' பட்டம் பெற்று இலங்கை திரும்பிய இவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து அரசியல் விஞ்ஞானத் துறையில் முதலில் விரிவுரையாளராகவும் பின்னர் இத்துறையின் முதலாவது பேராசிரியராகவும் கடமையாற்றினார், இதன் பின்னர் டாக்டர் வில்ஸன், கனடா பல்கலைக் கழகமொன்றில் அரசியல் விஞ்ஞானத் துறை பேராசிரியராகவும் பணியாற்றினார்.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து ஒரு புத்தகம் எழுதும் பொருட்டு டாக்டர் வில்ஸன் இரண்டு வாரங்களுக்கு முன்னர் இலங்கை திரும்பியிருந்தார்.

---

### வண்ணையில்

## அருட்பொலிவு திகழும் கதிர்வேலாயுதன் சாணீர்

நாட்டுக்கோட்டை நகரத்துப் பிரபுக்கள் நமக்களித்துச் சென்ற பெரும் செல்வம், தெய்வத்துடன் கூடிய கலியுக வரதன் தமிழ்த்தெய்வமாகிய கதிர்வேலாயுதசுவாமி கோவிலாகும். அவர்கள் ...8ம் ஆண்டு தாபகம் திரும் ...யின் இத்திருக்கோவிலுக் ...சொந்தமான அசைவற்ற ...த்துக்களிலிருந்து வரு ...ப் குன்றி திர்வாகத்தைச் ...க்கொண்டு நடத்தமுடி ...ந்நிலையில் அடியார்கள் ...யாழ்ப்பாண மாவட்ட ...

பான முறையில் வேதாகம முறைப்படி மந்திரங்கள், திருமுறைகள் ஓலிக்க, பிரதிஷ்டை பண்ணப்பட்டார். மஹாகும்பாபிஷேகம் முறைப்படி நடந்து பின்னர் வேதாகமப் பிரமாணங்களின்படி மண்டலாபிஷேகம் 48 நாட்கள் நடைபெற்று வருகின்றது இன்று பதின்மூன்றாவது நாள் மண்டலாபிஷேகம் நடைபெறுகிறது. காலை 8-30 மணிக்கு ஸ்நபனாபிஷேகமும், இரவு 6-30 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் நடந்து முருகப்பெருமான் வள்ளி தேவசேனா

— ப. சுப்பிரமணிய ஐயர் —

...பதிக்கு மனுச்செய்து, ...வட்ட நீதிபதியினால் ஒரு ...ங்காவலர் குழுவை நிய ...து நிர்வாகத்தையும், மேற் ...கோவிலுக்குச் சொந்த ...ன அசைவன, அசைவற்ற ...வான சொத்துக்களை அறங் ...வலர் குழுவிடம் ஒப்படைத் ...ர்.

இவ்வறங்காவலர் குழுவின் ...முயற்சியால் கடந்த ...7-79ம் திகதி மஹாபலி... ...சிற்பக்கலாசாலைச் சிற்ப ...ஸ்த்திரி - கணபதி ஸ்தபதி ...ரால் சிவாகமக்கிரமமாக ...மைக்கப்பட்ட வள்ளி தேவ ...ா சமேதரான ஸ்ரீகதிர் ...வேலாயுதசுவாமி, மிகச்சிறப்

சமேதராக உள்வீதிவலம்வந்து பக்தர்களுக்குக்காட்சி கொடுப்பார். இவ்வபிஷேகத்தில் கலந்துகொள்ள விரும்புவர்கள் மேற்படி ஆலய தர்மகர்த்தாக்களை தேவஸ்தானத்தில் தொடர்புகொண்டு ஒழுங்குசெய்யலாம்.

இம்மூலமூர்த்தியைத் தரிசிப்பவர்கள் தாம் யாழ்ப்பாணத்தில் இருப்பதை மறந்து திருச்செந்தூரில் திருமுருகன் சன்னதியில் இருப்பதாக உணர்ச்சிவசப்பட்டு நிற்பதைத் தினமும் காணலாம். முக்கியமாகச் சந்தனக்காப்புச் சாத்தப்பட்ட தினங்களில் மெய்மறந்து முருகனின் திருஉருவத்தைப்பார்த்து பரவசப்படாதோர் எவருமில்லை இலங்கையில் வேறு எந்த முருகன் சன்னதியிலும் காணாத முருகனின் திருஉருவத்தை இங்கு காண்கிறோம் என்று பக்தர்கள் சொல்லிக் கொள்கிறார்கள்.

மண்டலாபிஷேகம் 31-8-79 அன்று சங்கா சங்காபிஷேகத்துடன் பூர்த்திபெற்று முருகன் வெள்ளி மயில்மீது இரவு வீதி வலம்வந்து பக்தர்களுக்குக் காட்சியளிப்பார்.

---

### ...ஒக்டோபரிலிருந்து

## ...ம்பள உயர்வு

(கொழும்பு)

...அரசாங்க - தனியார்துறை ...ஊழியர்களுக்கு மேலும் ஒரு ...பள உயர்வு அக்டோபர் ...மாதத்திலிருந்து வழங்கப் ...ம் என்று தெரிகின்றது.

...மாதாந்தம் 300 ரூபாவி... ...ருந்து 500 ரூபாய் வரை ...ம்பளம் பெறும் ஊழியர் ...களுக்கே இந்த சம்பள உயர்வு ...வழங்கப்படும் என்று தெரி... ...து.

...ரிதாக அறிமுகப்படுத்தப் ...படவிருக்கும் உணவு முத் ...திரைத் திட்டத்தினாலும் எரி ...பொருள் விலையேற்றத்தினா ...ல் ஏழக்கூடிய] கஷ்டங்களை ...ஈடுசெய்... செய்வதற்காகவே ...இந்தச் சம்பள உயர்வை ...வழங்குவதற்கு அரசு ஆலோ... ...சித்து வருகின்றது.

---

### உயர்கல்வி பெற இந்தியா சென்றார்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரம் பாடசாலையில் கல்விபயின்ற கமலாம்பிகை தில்லையம்பலம், பருத்தித்துறை ஸ்ரீ சாரதாசேவாச்சிரமத்தின் ஆதரவில் கோவையிலுள்ள ஸ்ரீ அவிநாசிலிங்கம் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் தொடர்ந்துகல்வி பயில இந்தியாசென்றுள்ளார்.

---

ஆலய உயிர்ப்பலியை

## எதிர்த்துப் பிரசாரம்

(வேலணை)

ஆலயங்களில் உயிர்ப்பலிக்கு ஏதுவாகவில்லை தடைசெய்யும் கருத்தை மக்களிடையே பரப்புவதற்காக யாழ் பசுப்பாதுகாப்புச் சபையினர் நடாத்தும் பகிரங்கக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வேலணை கிழக்கு நால்வர் திருமடத்தில் திரு க செல்லப்பா சுவாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

பண்டிதர் செ சிவப்பிரகாசம், பண்டிதர் வே சங்கரப்பிள்ளை, வித்துவான் க கணபதிப்பிள்ளை, செல்வி அம்பிகா சுந்தையா, வைத்திய கலாநிதி திரு இராசரத்தினம், பொன் தியாகராசா உட்பட பலர் உரையாற்றுவார்கள். (கு)

---

## திருமறைப் பெருவிழா

(உடுப்பிட்டி)

மன்னார் மறைய வட்டப் பங்குகள் ஒன்றிணைந்து நடாத்தும் திருமறைப் பெருவிழா இன்று உயிலங்குளத்தில் நடைபெறவுள்ளது.

உயிலங்குளம் திறந்தவெளி அரங்கில் நடைபெறும் இவ்விழாவிற்கான ஒழுங்குகளை மன்னார் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் செய்துள்ளது.

---

## "பாவனையாளர்களைப் பாதுகாப்பதே இன்றைய அரசின் நோக்கம்"

(சங்கானை)

"எமது பகுதிகளில் சனசமூக நிலையங்கள், சங்கங்கள், பொது ஸ்தாபனங்கள் சபைகள் போன்றவை நாளாந்தம் ஸ்தாபிக்கப்படுகின்ற போதும் இயக்குனர்களினதும் பொது மக்களினதும் ஒத்துழையாமையால் சில மாதங்களிலேயே மறைந்துவிடுகின்றன, ஆனால் இன்று இங்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும் பாவனையாளர் பாதுகாப்புச் சபை கல்விமான்களையும் அனுபவசாலிகளையும் கொண்டுள்ளமையால் இப்பகுதி மக்களுக்கு சிறந்த சேவையாற்றும் என்பது திண்ணம்"

இவ்வாறு வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு எம் சுப்பிரமணியம் வலிமேற்கு பாவனையாளர் பாதுகாப்புச் சபை அங்குரார்ப்பணக்கூட்டத்திற்கு தலைமைவகித்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

வியாபாரிகளிடமிருந்து பொதுமக்கள் சுரண்டப்படுவதைதவிர்த்துக்கொள்வதற்கு இச் சபை அத்தியாவசியமானது. கிராமந்தோறும் இதுபோன்ற சபைகள் ஆங்காங்கே நிறுவுதல்வேண்டும். இன்றைய அரசின் முக்கிய நோக்கங்களில் ஒன்றுதான் பாவனையாளரை திருப்திப் படுத்துதல்: இதனால் நாட்டில் அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு தவிர்க்கப்படுவதுடன் மக்களை சுரண்டும் பேர்வழிகளும், கள்ளச்சந்தைக்காரர்கள் பதுக்கல் செய்வோர் தானாகவே மறைகின்றனர். ஆனாலும் இவற்றையும் மீறி இயங்கும் வர்த்தகர்களை கட்டுப்படுத்துவதற்கு பாவனையாளர் பாதுகாப்புச் சபை இன்றியமையாததாகும்.'

யாழ் மாவட்ட உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளரும் உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரியுமான திரு. கா சி வேல்முருகு பேசுகையில் கூறியதாவது:

"மக்களின் அபிலாஷைகளையும் தட்டுப்பாட்டையும் அரசு நிவர்த்திசெய்து வருவதுடன், கலப்படம், நிறைகுறைவு, பதுக்கல், கள்ளச்சந்தை, பொருட்களை வைத்துக் கொண்டு விற்கமறுத்தல் போன்றவற்றைத் தவிர்க்கவும் கட்டுப்பாட்டுப்பிரிவு கண்டிப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது:

"எந்த ஒரு குறையேனும் ஒருவியாபாரி செய்வாரேயானால், எம்முடன் தொடர்புகொள்ளும் பட்சத்தில் நாம் உடன் சட்டநடவடிக்கை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட வர்த்தகரைக் கண்டிப்போம். எனவே பாவனையாளர் பாது

(8ம் பக்கம் பார்க்க)

---

### பொலிஸ் பகுதி: பெரும் மாற்றங்கள்

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் பகுதியில் பெரும் மாற்றங்கள் செய்யப்படவிருப்பதாக தெரிய[illegible]லிஸ் மா அதிபர்களின் எண்ணிக்கையும் பதினைந்தாக உயர்த்தப்படவுள்ளது.

வடபிராந்திய பொலிஸ் பொறுப்பதிகாரியாக தற்போது கடமையாற்றும் பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. இறிக் ஹேரத், பாதுகாப்பு அமைச்சில் முக்கிய பதவி ஏற்பதை அடுத்து அவரது இடத்திற்கு தற்போது குற்றப் புலனாய்வு அதிபராகக் கடமையாற்றும் திரு. எட்வேட் குணவர்த்தன பதவி ஏற்பார் எனவும், அவரே வடபிராந்தியத்திற்கும் பொறுப்பாக இருப்பார் எனவும் தெரியவருகிறது. பொலிஸ் மா அதிபர் திரு. எஸ் எஸ் லோகநாதன் ஓய்வு பெறுவதால், அவரின் பதவிக்கு நகரப்பொலிஸ் அத்தியட்சகர் திரு. வாசுதேவன் நியமிக்கப்படுகிறார்.

---

## சின்னமடு ஆலய உற்சவம்

(உடுப்பிட்டி)

சின்னமடு ஆலய வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 5-ந் திகதி காலை நடைபெறும். பாடற்பூசையுடனும் திருச்சொரூப பவனி ஆராதனையுடனும் நிறைவுபெறும்.

4-ந் திகதி இரவு நற்கருணைப் பூசையும், நற்கருணை ஆராதனையும் நடைபெறும். இவ் உற்சவங்களை நாரந்தனைப் பங்குக் குரவர் நடாத்தி வைப்பார்.

---




கடந்தவாரம் வனபரிபாலன இலாகாவால் அனுஷ்டிக்கப்பட்ட மரம்நாட்டுவிழாவின்போது கிளிநொச்சி வட்ட வன அதிகாரி திரு எம் ஏ குலாம் தலைமையில் யாழ்ப்பாணம் சாவகச்சேரி, கிளிநொச்சி முதலான இடங்களில் மரக்கன்றுகள் விற்பனை செய்யப்பட்டன. சஞ்சீவி, சவுக்கு, தேக்கு ஆகிய மரக்கன்றுகளை இவர்கள் விநியோகித்தனர். பளை, கிளிநொச்சி நாற்பத்தி நிலையங்களிலிருந்து இக்கன்றுகள் [illegible]

# லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதலுக்கு கண்டனம்!

பெய்ரூட், ஜூலை 27

தென்லெபனானிலுள்ள குடியிருப்பு பிரதேசங்கள் மீது இஸ்ரேலியப் படையினர் நடாத்திய குண்டுவீச்சுத் தாக்குதலுக்கு லெபனான் பிரதமர் எஸ். ஹொஸ் வன்மையாக கண்டனம் தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதலின்போது 20 சிவிலியன்கள் கொல்லப்பட்டனர் என்றும் 80 பேர் படுகாயமடைந்தனர் எனவும் அறிவிக்கப்படுகிறது.

"அப்பாவி மக்கள் மீது இஸ்ரேலியப் படையினர் நடாத்தியுள்ள இந்தக் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் சர்வதேச சட்டங்கள் எதையும் கௌரவிக்காத இஸ்ரேலின் போக்கினுக்கு நல்ல உதாரணமாகவுள்ளது. லெபனானது சுயாதிபத்தியத்தை மீறும் வகையில் இஸ்ரேல் மேற்கொள்ளும் இவ்வாறான நடவடிக்கைகளை உலக நாடுகள் அனைத்தும் கண்டிக்கவேண்டும்" என்று பிரதமர் எஸ் ஹொஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

# "ஊர்சுற்றுகிறாய்" என்று தந்தை; தனயனை தற்கொலை!

(மாவிட்டபுரம்)

கூட்டாளிகளுடன் சேர்ந்து ஊர்சுற்றப் புறப்பட்ட மகனை தந்தை தடுத்ததால், விளைவு விபரீதமானது!

சுன்னாகத்தைச்சேர்ந்த சின்னத்துரை ஸ்ரீபாலகிருஷ்ணன் (21 வயது என்னும் ஆடவரின் திடீர்மரணம் தொடர்பாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு ... விசாரணை நடத்தினார்

காலமானவர் அடிக்கடி கூட்டாளிகளுடன் சேர்ந்து ஊர் சுற்றப்புறப்பட்டு வந்தாரென்றும், கூடாத கூட்டத்தினருடன் சேரக்கூடாது என்று தந்தை பலமுறை கண்டித்து வந்ததாகவும், சம்பவதினமும் கூட்டாளிகளுடன் செல்வதற்காக காலமானவர் சைக்கிளை

(7-ம் பக்கம்பார்க்க)

## வெளிநாடுசெல்ல ஆசைப்பட்டவர்:

# பணம் கிடைக்காத தால் இளைஞர் தற்கொலை!

(மாவிட்டபுரம்)

வெளிநாடு செல்ல ஆசைப்பட்ட இளைஞர் ஒருவர், அது தொடர்பான அலுவல்களை மேற்கொள்வதற்காக பெற்றோரிடம் பணம் கேட்டாராம். பணம் கிடைக்காததால் அவர் மரணத்தைத் தழுவிக்கொண்டார்!

வசாவிளானைச் சேர்ந்த பொன்னையா பாலசுந்தரம் (22வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராகும்.

இவரது மரணம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி. திரு நா. தம்பிராசா விசாரணை நடத்தியபோது காலமானவரின் தந்தை இளைய தம்பி பொன்னையா தமது சாட்சியத்தில் கூறியதாவது!

"காலமான எனது மகன் வெளிநாடு செல்ல வேண்டுமென பலநாட்களாக ஆசைப்பட்டுக் கொண்டிருந்ததுடன் அதுதொடர்பான அலுவல்களை மேற்கொள்வதற்காக பணம் தேவைப்படுவதாகவும் என்னிடம் கேட்டுவந்தார். நான் இதுபற்றி அண்ணனுடனும் யோசித்து ஆறுதலாக முடிவு எடுக்கலாமென்று சொல்லிவந்தேன். சம்பவதினம் பணம் தருமாறு தாயாரிடம் கேட்க அவர் இல்லையென்று கூறவே, மதுவை அதிகமாக அருந்திவிட்டு, வீட்டில் பயிருக்கு தெளிக்க வைத்திருந்த கிருமிநாசினியை எடுத்து அருந்தினார். உடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றும் பலன் கிடைக்கவில்லை"

சாட்சியங்களையடுத்து தற்கொலை என்று மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

# தென் ஆபிரிக்காவில் இஸ்ரேலிய இராணுவத்தினர்

லண்டன், ஜூலை 27

தென்ஆபிரிக்காவின் இராணுவக் குடியிருப்புத்திட்ட நிர்மாண வேலைகளில் உதவிசெய்யும் பொருட்டு அங்கு இஸ்ரேலிய இராணுவ நிபுணர்கள் பணியாற்றிவருவதாக ஜோஹானஸ்பேர்க்கிலிருந்து கிடைக்கப்பெறும் செய்திகள் கூறுகின்றன.

மொஸாம்பிக் எல்லையோரமுள்ள தென்னாபிரிக்கப் பிரதேசத்தில் பலவிமானத்தளங்களுடன் கூடிய பாரிய இராணுவ தலமொன்றினை நிர்மாணிப்பதில் இஸ்ரேலிய நிபுணர்கள் தென்னாபிரிக்க இராணுவ நிபுணர்களுக்குத் துணை செய்துவருகிறார்கள். இந்த இராணுவ நிலையத்தின் விமானத்தளங்களை ஜெட்விமானங்களும் பயன்படுத்தும் எனத்தெரிகிறது.

அந்த இராணுவ ஸ்தல குடியிருப்புகளில் பல வெளிநாட்டுக் கூலிப்பட்டாளங்களும் குடியமர்த்தப்படவுள்ளன என்று மேற்படி செய்திப்பிரிக்கைகள் கூறுகின்றன.

# சமய அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழாவை முன்னிட்டு வைமன் இந்துஇளைஞர் இயக்கம் வருடா வருடம் நடாத்தும் சமய அறிவுப்போட்டியின் இவ்வருடப்போட்டிக்கான விடைகள் அடங்கிய துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அடுத்தமாதம் 22ந்திகதி பரிசில்கள் வழங்கப்படுமென்றும் விடைகளை 3, வைமன் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்குமாறும் செயலாளர் தெரிவித்துள்ளார். (நு)

# பஸ்-ஜீப்-சைக்கிள் விபத்து

(யாழ்ப்பாணம்)

பஸ்ஸும் ஜீப்பும் மோதிக்கொண்டதில் அவ் வழியாக சைக்கிளில் வந்துகொண்டிருந்த ஒருவரும் எதிர்பாராதவிதமாக மோதப்பட்டார். சைக்கிளில் வந்தவரும் ஜீப்பில் பிரயாணம் செய்த பெண் ஒருவரும் உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸும் நாவலர் வீதிவழியாக வந்து பருத்தித்துறை வீதி நோக்கிய ஜீப்பும் மோதிக்கொண்டபோது அந்நேரம் நல்லூர்ப் பக்கமிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சைக்கிளில் வந்துகொண்டிருந்த இருவர் ஜீப்புடன் மோதுண்டனர். ஜீப்பின் சில்லுக்குள் அகப்பட்ட சைக்கிளும் சேதத்திற்குள்ளானது. சைக்கிளில் சென்ற சகோதரர்களில் ஒருவர் பலத்த காயத்திற்குள்ளானார்.

சைக்கிளில் வந்த ஒருவரும் ஜீப்பில் பிரயாணம்செய்த பெண்ணும் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

யாழ். போக்குவரத்துப் பகுதி பொலிஸ்கான்ஸ்டபிள் குணசேன, எஸ். இராசரெத்தினம் ஆகியோர் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்; பஸ்சாரதி வீரகத்தி இராசரெத்தினம், ஜீப் சாரதி மூர்த்தி இரத்தினசிங்கம் ஆகியோர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (கொ)


வீடு கட்டுதல், சுவர் எழுப்புதல்,
தரை அமைத்தல்...
எதுவாயினும்
பாவியுங்கள்



மேசன் வேலைக்கானசீமெந்து

மேசன் வேலைக்கான சீமெந்து, வீட்டு நிர்மாணத்தில் ஒரு புதுமையாகும், இது சிக்கனமானது; மலிவானது. சீமெந்துக்கான அமெரிக்க தர நிர்ணயத்துக்கு இணங்கியது. போர்ட்லண்ட் சீமெந்தைப் போலவே இதனையும் பாவிக்கலாம். சீமெந்து / மணல் விகிதாசாரம் போர்ட்லண்ட் சீமெந்துக்குப் போலவேயாகும். மேசன் வேலைக்கான சீமெந்துக்கு சுண்ணாம்பு தேவையில்லை. மணல், சீமெந்து, தண்ணீர் இவை மூன்றுமே போதும்; கலவை பூரணமாகிவிடும்.

மேசன் வேலைக்கான சீமெந்து கொண்டு கட்டடச் செலவைக் குறையுங்கள்:

- கொங்கிறீட் வேலைக்குப் பயன் படுத்தக்கூடாது.
50 கி. கிராம் கொண்ட ஒரு பை மேசன் வேலைக்கான சீமெந்தின் விலை:
- புத்தளம் அல்லது காங்கேசன்துறைத் தொழிற்சாலையிலிருந்து ரூபா 17/90
- காலி தொழிற்சாலையிலிருந்து ரூபா 20/80.

## இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்

தபால் பெட்டி 1382, சுதந்திர சதுக்கம், கொழும்பு- 7. தொலைபேசி: 95628. 95801-4.

# மாங்குளம்-முல்லைத்தீவு ரயில் சேவை?

## போக்குவரத்து அமைச்சருடன் 'இராசு' விரைவில் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

மாங்குளத்துக்கும் முல்லைத் தீவுக்குமிடையே புகையிரதப் பாதையொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை பிராந்திய அபிவிருத்தியமைச்சர் திரு செ இராசதுரைமேற்கொள்ளவிருக்கிறார்.

இது பற்றி அவர் விரைவில் போக்குவரத்து அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

தம்மைச் சந்தித்த வன்னி அபிவிருத்திக் கழகத்தின் தூதுக்குழுவிடம் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

திரு சி உ. நடனசபாபதி தலைமையில் தூதுக்குழு ஒன்று அமைச்சரை சந்தித்து, வன்னி அபிவிருத்திபற்றி பேச்சுவார்த்தைநடாத்தியது. பத்து அம்சத் திட்டமொன்றையும் குழு அமைச்சரிடம் கையளித்தது. அத்திட்டங்களில் ஒன்றாகவே மாங்குளம் - முல்லைத் தீவு புகையிரதப் பாதையும் இடம்பெற்றிருந்தது

467 குளங்களுள்ள அப்பிரதேசத்தில் 5 குளங்களின் கட்டுகளை உயர்த்துவதுடன், குஞ்சுக் குளத்திலிருந்து நந்திக் கடல்வரை 500 ஏக்கர் பரப்பை புற்றரையாக்கி, கால்நடைப் பண்ணை ஒன்றை அங்கு அமைக்கவும் அமைச்சர் உறுதியளித்திருக்கிறார்.

முள்ளியவளை வித்தியானந்த மகாவித்தியாலய வளவினுள் தொழில்நுட்ப கல்லூரி ஒன்றை நிறுவவும் அவர் உறுதியளித்திருக்கிறார். (ம)

# நல்லூரில் விசேட பொலிஸ் நிலையம்

(யாழ்ப்பாணம்)

நாளை ஆரம்பமாகும் நல்லூர்க் கந்தசுவாமிகோவில் வருடாந்த உற்சவத்தை யொட்டி, இன்று நல்லூர்க் கந்தசுவாமிகோவில் தெற்கு வீதியில் தற்காலிகப் பொலிஸ் நிலையமொன்று அமைக்கப் படவிருக்கிறது.

இன்று நிறுவப்படவிருக்கும் தற்காலிகப் பொலிஸ்நிலையம், ஆலய வருடாந்த உற்சவம் முடிவடையும்வரை தொடர்ந்து இயங்கும்

உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு வி தம்பா பிள்ளை பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றும் இப் பொலிஸ்நிலையத்தில் 3 இன்ஸ்பெக்டர்கள், 5 சார்ஜன்ட்டுகள், 40 கான்ஸ்டபிள்கள் கடமையாற்றுவார்கள்.

தற்காலிகப் பொலிஸ்நிலையத்தில் கடமையில் ஈடுபடவுள்ள பொலிஸாருக்கு, அவர்கள் கடமையாற்றவேண்டிய முறைபற்றிய வகுப்பொன்று இன்று காலை யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெறவுள்ளது

கோவில் சுற்றுடலில் பொலிஸார் நடந்துகொள்ளவேண்டிய முறைபற்றி உதவிப் பொலிஸ் அதிபர் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

கோவில் வீதியில், தொப்பி, சப்பாத்து அணியக்கூடாதென்றும், உள் வீதிக்குள் மேற்சட்டை அணிந்துசெல்லக்கூடாதென்றும், அடியார்களுடன் இங்கிதமாக நடந்து, அவர்களுக்குத் தேவையான உதவிகளையும், வசதிகளையும் செய்யவேண்டுமென்றும், ஒழுங்கு மீறி எவரும் நடந்தால் அவர் கோவில் பகுதியிலிருந்து வாபஸ் பெறப்படுவாரென்றும் அச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கோ-க-இ)

# நல்லூர்க்கந்தன் கொடித்தினம்

நானிலம் போற்றிட நன்மைகள் ஓங்கிட
நங்கையர் பாடி மகிழ்ந்தாடு
நல்லைக்குமரன் நங்குல வேந்தன்
நல்லூர்க் கந்தன் கொடித்தினமே. (நா)

ஈழத்தின் வடக்கில் இனிக்கும் யாழ்ப்பாணத்தில்
இலங்கிடும் இனிய நல்லூரில்
கோலக்குமரன் குறவள்ளி நாதன்
நல்லூருக் கந்தனின் கொடித்தினமே (நா)

பாவங்கள் நீங்கிட புண்ணியம் ஓங்கிட
தானங்கள் நல்கிடும் இந்நாளில்
பாவலர் நாவலர் பாமரர் யாவரும்
பாடி மகிழ்ந்திடும் நன்னாளே (நா)

மங்கள மங்கையர் மணங்கவர் நங்கையர்
மன்னர்கள் கூடிக் களித்தாடும்
மாமயில் வாகனன் மாயவன் மருமகன்
நல்லூருக் கந்தனின் கொடித்தினமே (நா)

இ[illegible] மறந்து இன்பம் மிகுந்து
[illegible]டும் இந்நாளில்
[illegible] குறவள்ளி நாதனை
பாடிக் [illegible]யடியுங்கடி (நா)

-சி. வே. கந்தையா

# இன்று கருத்தரங்கு

[வேலணை]

யாழ். மாவட்ட சனசமூக நிலைய முன்மாதிரி செயல் திட்ட ஒன்றியத்தின் கருத்தரங்கொன்று இன்று சனிக்கிழமை வேலணை செட்டிபுலம் சனசமூகநிலைய மண்டபத்தில் ஒன்றியத்தின் தலைவர் திரு வ. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

இக்கருத்தரங்கினை வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு மு. தம்பிமுத்து சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்துவைப்பார். யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு என். பி ஜெகநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளுவார்.

கருத்தரங்குகளுக்கான சகல ஒழுங்குகளையும் மேற்படி ஒன்றியத்தின் உபதலைவர் திரு மு. செல்வராஜா செய்துள்ளார். (அ)

# இந்திரா மகிழ்ச்சி

புதுடில்லி, ஜூலை 27

இந்திய முன்னாள் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் தாமாகவே பதவியிலிருந்து ராஜினாமாச் செய்திருந்தால் ஜனதாக் கட்சிக்குள் நெருக்கடி ஏற்பட்டிருக்காது.

இவ்வாறு ஆச்சார்ய கிருபளானி தெரிவித்துள்ளார்.

இந்திரா மகிழ்ச்சி

திரு தேசாயின் ஆட்சி வீழ்ச்சியுற்று திரு சரண்சிங் பிரதமராகப் பதவி ஏற்க இருப்பது மகிழ்ச்சிக்குரியது என இந்திரா காங்கிரஸ் தலைவி திருமதி இந்திரா காந்தி தெரிவித்துள்ளார்.

திரு சரண்சிங் பிரதமராகப் பதவி ஏற்க இருப்பது திருமதி இந்திரா காந்திக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

# கருணாநிதி பாராட்டு

சென்னை, ஜூலை 27

'கிஸான்' சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் இந்தியாவின் பிரதமராகப் பதவி ஏற்க இருப்பது வரவேற்புக்குரியது என்று தமிழக எதிர்க்கட்சித் தலைவரும், தி மு க தலைவருமான திரு மு கருணாநிதி தெரிவித்துள்ளார். (இ)

# 'சரண்' அரசை கவிழ்க்க எம். ஜி. ஆர். கட்சி முயலாது

## புதிய பிரதமருக்கு தமிழக முதல்வர் பாராட்டு

புதுடில்லி, ஜூலை 27

இந்தியாவில் பதவி ஏற்கவிருக்கும் திரு சரண்சிங்கின் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் எந்த ஒரு நடவடிக்கையிலும் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் ஈடுபடாது என்று அ தி மு க வின் பாராளுமன்ற குழுத்தலைவர் திரு பாலாபழனூர் தெரிவித்துள்ளார்.

அ தி மு க எதிர்க்கட்சியிலிருந்தாலும் தென்னகத்தின் விசேட நலன்களைக் கவனிப்பதில் விசேட கவனம் எடுத்துக் கொண்டு அரசுக்கு பூரண ஆதரவு அளிக்கும் என்றும் திரு பாலாபழனூர் தெரிவித்துள்ளார்.

எம் ஜி ஆரின் பாராட்டு

இதே வேளையில் தமிழக முதல்வர் திரு எம் ஜி இராமச்சந்திரனின் பாராட்டுக்களை புதுடில்லியிலுள்ள தமிழக அரசின் விசேட பிரதிநிதி திரு ரஜாராம், திரு சரண்சிங்கைச் சந்தித்து திரு எம் ஜி இராமச்சந்திரனின் பாராட்டுக்களைத் தெரிவித்ததுடன், அ தி மு க புதிய அரசுக்கு முழு ஆதரவையும் அளிக்கும் என்ற எம் ஜி ஆரின் விசேட செய்தியையும் தெரிவித்தார்.

## ரஷ்யாவில் புலமைப்பரிசில் பெற்று

# பொறியியல் கல்வி கற்கச் சென்றவர் அகால மரணம்!

(யாழ்ப்பாணம்)

ரஷ்யாவில் புலமைப் பரிசில் பெற்று, உயர்கல்வி கற்கச் சென்ற தமது மகன் பொறியியல் நிபுணராகத் திரும்பி வருவானென்று எதிர்பார்த்திருந்த பெற்றோருக்கு, அவன் அகால மரணமடைந்துவிட்டானென்ற நெஞ்சுருக்கும் செய்தி கிடைத்துள்ளது.

சங்குவேலியைச் சேர்ந்த சிவகுருநாதர் தம்பதியின் ஒரே மகனான செல்வன் சிவபாலனின் மரணச் செய்தியே அவரது பெற்றோருக்குக் கிடைத்துள்ளது பட்டப் படிப்புக்காகப் புலமைப்பரிசில் பெற்று, ரஷ்யா சென்றிருந்த சிவபாலன், அங்குள்ள மின்ஸ் பல்கலைக்கழகத்தில் மூன்றாண்டுகள் பயிற்சி நெறியை முடித்துவிட்டநிலையில் இன்னும் இரண்டரை ஆண்டுகளில் இலங்கை திரும்புவதாக இருந்தார்.

24 வயதான இவர், உடுவில் மகளிர் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். சிவபாலன் கல்வி பயிலும் காலங்களில் விளையாட்டுத்துறைகளிலும், தமிழ் ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளிலும் பல பரிசில்கள் பெற்றவர்.

சிவபாலனின் பூதவுடலை இங்கு வரவழைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (இ)

# கேதீஸ்வர கோணேஸ்வர பதிகங்களை பாடத்திட்டத்தில் சேர்க்கக் கோரிக்கை

(கொழும்பு)

க. பொ. த. (சாதாரணம்) பரீட்சைக்கான இந்து சமய பாடத்திட்டத்தில்திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வர பதிகங்களும்பட தேவார, திருவாசக பதிகங்களைச் சேர்ப்பதுடன், நால்வர் வரலாறு, திருவருட்பயன் ஆகியனவும் சேர்க்கப்படவேண்டுமென்றும் இவற்றைப் பாடசாலைகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கல்வி அமைச்சரைக் கேட்பதென்று அகில இலங்கை இந்துமாமன்றம் தீர்மானித்திருக்கிறது.

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற ஆண்டுப்பொதுக் கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது அத்துடன், ஆரம்ப பாடசாலைகளில் சைவ அடியார்கள் பாடல்கள், கதைகளைத் தவிர, நவநாகரிக பாடல்கள், கதைகள் என்பன போதிக்கப்படுவது தவிர்க்கப்படவேண்டும் என்றும் மன்றம் தீர்மானித்தது.

இந்துமா மன்றத்தின் புதிய தலைவர், செயலாளராக மீண்டும் ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம், திரு. பொ. வன்னியசிங்கம் ஆகியோரே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சமயவிவகாரம், குருகுலம், நிதி, கட்டடம் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக தனித்தனி குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு, சிறம்பலம் காடினர் மாவத்தையில் நீண்டகாலமாக ஆரம்ப நிலையிலேயே வேலைகள் ஸ்தம்பித்துள்ள மன்றக்கட்டடத்தை இவ்வாண்டு பூர்த்தியாக்கவேண்டுமென தலைவர் இக்கூட்டத்தில் கேட்டுக்கொண்டார். (ம)

# பாதுகாப்பதே...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

சாய்புச்சபை உறுப்பினர்களும் பொதுமக்களும் விழிப்பாக இருந்து ஒத்துழைப்பதால் நாட்டில் சுரண்டல்பேர்வழிகள் மறைந்து பாவனையாளர் திருப்திப்படவும் ஏதுவாகும்.

வலி மேற்கு பாவனையாளர் பாதுகாப்புச்சபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு மு செ.கந்தையா, செயலாளர்: சி. க. பேரம்பலம். பொருளாளர்: திரு கு. பொ சிவகுருநாதன். ஆறுபேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (கு)

# இன்று கூடி ஆராய்வர்

இலங்கை கல்வி, கலை பண்பாட்டுக்காப்புக்கழகச் சிறப்புச் செயற்குழுக்கூட்டம் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனமண்டபத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் கூடுகிறது. கழகத் தலைவர் சட்டத்தரணி த. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் கழகச் செயலகக்கால் விழா சம்பந்தமான விஷயங்கள் ஆராயப்படும். இவ்விழா அடுத்த மாதம் நடைபெறவிருக்கிறது விழாச்சிறப்பு மலரும் வெளியிடப்படும். (அ)

# திருமலை நகரசபை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

குறித்த தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்திற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் அனைவருடனும் ஐதேக உறுப்பினர்களான ஜனாப் ஒ எல் எம் இஸ்மயில் திரு த மாணிக்கவாசகர் ஆகியோரும் இத்தீர்மானத்திற்கு ஆதரவளித்தனர்.

மாவட்ட இணைப்பு தொடர்பாக பாராளுமன்றத்தை பகிஷ்கரித்துள்ள கூட்டணி உறுப்பினர்களைப் பாராட்டுவதெனவும் இவர்கள் ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றினர்.

திருகோணமலை வீதிகளில் நடைபாதை வியாபாரிகளின் தொல்லை அதிகரித்துள்ளதினால் அவர்களுக்கு புதிய சந்தையில் இடமளிக்கப்பட வேண்டுமென பல அங்கத்தவர்கள் சுட்டிக்காட்டியபோது நகர நிருமாணசபை வந்ததும் அது பற்றி ஆலோசிக்கலாமென தலைவர் கூறினார். [கா-இ]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ... 1979-ம் ஆண்டு ஜூலை மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/3945/78 The Eelanadu P B No: 49, Telegrams: Eelanadu ...